துறைசை யாதீன வெளியீடு க.

உ
சிவமயம்.

முத்தி பஞ்சாக்கர மாலையும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்
அருளிச்செய்த

பஞ்சாக்கர தேசிகர் மாலையும்

அவ்வாதீனத்து
இருபதாவது மகாசந்நிதானமாகிய
ஸ்ரீலஸ்ரீ
அம்பலவாண தேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி

ஷை ஆதீனத்து வித்துவான்
வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை
எழுதிய
பதவுரையுடனும்
ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் சரித்திரத்துடனும்

கும்பகோணம்
யதார்த்தவசனீ அச்சு யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டன.

விக்ரமஹு தைமீ
1941.

துறைசை யாதீன வெளியீடு க.

உ
சிவமயம்.

முத்தி பஞ்சாக்கர மாலையும்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்
அருளிச்செய்த

பஞ்சாக்கர தேசிகர் மாலையும்

அவ்வாதீனத்து
இருபதாவது மகாசந்நிதானமாகிய
ஸ்ரீலஸ்ரீ
அம்பலவாண தேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
ஷை ஆதீனத்து வித்துவான்
வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை
எழுதிய
பதவுரையுடனும்
ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் சரித்திரத்துடனும்

கும்பகோணம்
யதார்த்தவசனீ அச்சு யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டன.

விக்ரம௵ தைமீ

1941.

உ

சிவமயம்.

முன்னுரை.

முடியுடை வேந்தர் மூவருக்குப்பின் நமது தாய்மொழியாகிய தமிழையும் சமய வாசாகிய சைவ சமயத்தையும் பேணிவந்த பெருமை திருவாவடுதுறை ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் ஆதீனத்திற்கு உரிய தனிப்பெருமை யென்பதை அறிஞர் உலகம் நன்கு அறியும். வடமொழியில் பாடியங்கள் பல இருக்கின்றன. பாணினீயம் என்னும் இலக்கணத்திற்குப் பதஞ்சலி மகாபாடியமும், மீமாம்சைக்குச் சபர பாடியமும், பிரம சூத்திரத்திற்கு நீலகண்ட பாடியம், சங்கர பாடியம், இராமாநுஜ பாடியம், ஆனந்த தீர்த்த பாடியம் முதலிய பல பாடியங்களும், வடமொழிச் சிவஞான போதத்திற்குச் சிவாக்கிர பாடியமும் இருக்கின்றன. ஆனால், நமது தமிழிலோ அவ்வகைப் பாடியம் ஒன்றுமில்லை. நமது பஞ்சாக்கர தேசிகாதீனத்து ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான போதத்திற்கு மெய்கண்டதேவ நாயனார் அருளிச்செய்த வார்த்திகப் பொழிப்பின்மேல் சிவஞான பாடியம் அருளிச்செய்து தமிழன்னைக்கு நெடுங்காலமாகப் பாடியமில்லாதிருந்த குறையை நீக்கியருளினார்கள். இஃதொன்றே திருவாவடுதுறை யாதீனத்தின் பெருமையைக் குன்றிலிட்ட தீபம்போல விளக்குவதாகும். ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் காவியம், இலக்கணம், தருக்கம் முதலிய பல துறைகளிலும் புகுந்து அரிய நூல்கள் பல அருளிச் செய்திருக்கின்றார்கள். இதனை நன்குணர்ந்த ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் 'நூல், கற்பா னசையிற் சிவஞான தேவன் கலையுணர்க' என்று அறிவுறுத்தியிருக்கின்றனர்.

சுவாமிகளின் மாணாக்கர் பன்னிருவருட் சிறந்தவரும் கவிராக்ஷஸனெனப் புகழ்ப்பெற்றவருமான ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சங்க நூல்களிலும் பஞ்ச காவியங்களிலும் காணப்படும் சொற்பொருளழகுகளையும் இலக்கண வமைதிகளையும் ஒருசேரத் திரட்டித் தணிகைப் புராணம் அருளிச் செய்திருக்கின்றனர். அம்முனிவரர் தமிழறிவை மாணாக்கர்கள் படிமுறையாற் பெறும்பொருட்டுப் பூவா

ளூர்ப் புராணம், விநாயக புராணம், பேரூர்ப் புராணம், திருவானைக் காப் புராணம், காஞ்சிப்புராணத்து இரண்டாம் காண்டம் என்பன வற்றையும் இயற்றியருளினர். அன்றியும், திருத்தணிகையாற்றுப் படை முதலிய எழு பிரபந்தங்களையும் அவர்கள் அருளிச் செய்திருக்கிறார்கள்.

சுவாமிகளின் மற்றோர் மாணவராகிய தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் கலைசைச் சிலேடை வெண்பா, துறைசைக் கோவை முதலிய பல பிரபந்தம் இயற்றியருளினர். இவையனைத்தும் பழங்காலச் செய்திகள்.

இவ்வாதீனத்து 15-வது ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் காலத்தும் 16-வது ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் காலத்தும் இவ்வாதீன வித்துவானாக இருந்த திரிசிரபுரம் ஸ்ரீமான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் 23 புராணங்களும் பல பிரபந்தங்களும் இயற்றியும் பல நன் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தும் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர். சென்னை பிரமஸ்ரீ மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பிள்ளையவர்களின் மாணாக்கர் என்றால் பிள்ளையவர்களின் பெருமையை வேறென் சொல்வது. பிள்ளையவர்கள் காலத்திற்குப்பின் 16-வது ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் காலத்தில் யாழ்ப்பாணத்து வடகோவை ஸ்ரீமான் சபாபதி நாவலரவர்கள் இந்த ஆதீன வித்துவானாக இருந்து சிதம்பர சபாநாத புராணம், சதுர்வேத தாற்பரிய சங்கிரக மொழிபெயர்ப்பு, சிவகர்ணாமிர்த மொழிபெயர்ப்பு, திராவிடப் பிரகாசிகை முதலிய பல நூல்களியற்றித் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர். சேற்றூர் ஸ்ரீமான் மு. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களும் இவ்வாதீனத்து வித்துவானாக இருந்து பலர்க்குத் தமிழ் கற்பித்து வந்தார்கள். பிரமஸ்ரீ டாக்டர் ஐயரவர்களும் சிற்சில காலம் திருவாவடுதுறையிலிருந்து மாணாக்கர்களுக்குத் தமிழ் கற்பித்து வந்தார்கள்.

இத்தகைய இத்துறைசை யாதீனத்திற்கு இடைப்பட்ட சில காலத்தில் நேர்ந்த நிலையை, இப்பொழுது இவ்வாதீன மகா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் திருவுள்ளத்திற் கொண்டருளி ஒன்றுக்கும் பற்றாத

அடியேனை இவ்வாதீன கைங்கரியத்தில் ஈடுபடுத்தியருளி, ஆதீன வெளியீடாக முதலில் முத்தி பஞ்சாக்கரமாலை, ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர்மாலை என்னுமிரண்டும் காலங்கிலைக் கேற்பப் பதவுரையுடனும் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளின் சரித்திரத்துடனும் வெளிவரல் வேண்டுமென அடியேனுக்கு ஆணையிட்டருளினார்கள். அவ்வாணையைச் சிரமேற்கொண்டு என் அறிவு சென்ற அளவில் அந்நூல்கள் இரண்டனுக்கும் பதவுரை எழுதியிருக்கின்றேன். ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் சரித்திரத்தை, அதன் முற்பகுதி முன் ஞானசம்பந்தப் பிள்ளை யெழுதிய சிவஞான சுவாமிகள் வரலாற்றை ஆதாரவாகக் கொண்டும், பிற்பகுதி இவ்வாதீனத்து வித்துவான் ஸ்ரீ பூசைச் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் இயற்றிய குருபாம்பரை விளக்கத்தை ஆதரவாகக்கொண்டும் எழுதியிருக்கின்றேன். இதிற் காணப்படும் பிழைகளைப் பொறுக்கும்படி அறிஞர்களை வேண்டிக் கொள்கிறேன்.

திருவாவடுதுறைப் புராணம், ஞானபூசைத் திருவிருத்தம் (பழைய வுரையுடன்), ஸ்ரீ சிவஞான சுவாமிகள் பிரபந்தத்திரட்டு (விளக்கவுரையுடன்), ஸ்ரீ கச்சியப்ப முனிவர் பிரபந்தத்திரட்டு (விளக்கவுரையுடன்) என்பன அச்சிடச் சித்தமாகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திருவாவடுதுறை.
31—1—1941.

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை,
ஆதீனவித்துவான்.



ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள்.

சிவமயம்.

திருக்கைலாயபரம்பரைத்
திருவாவடுதுறையாதீனத்துப் பிரதம பரமாசாரியர்
ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் சரித்திரச் சுருக்கம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி தழைக மாதோ.

திருக்கயிலாய மலையிலே அருள்வடிவாகிய கல்லாலமா நிழலிலே தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீகண்டபரமசிவனிடத்தில் ஆகமங்களையெல்லாம் கேட்ட நந்திபெருமான், அவரை வணங்கிநின்று 'காமிக முதலிய சைவாகமங்களின் ஞானபாதப் பொருளின் மாறுபாடுகளை நீக்கி அவற்றின் பொருளுண்மை போதித்தருளவேண்டு' மென்று விண்ணப்பஞ் செய்தனர். ஸ்ரீகண்ட முதல்வர் 'நன்றே வினவினாய். அவ்வுண்மை ரௌரவாகமத்துட் பன்னிரு சூத்திரத்தாற் கூறப்பட்டது. அது சிவஞானபோதம் என்பதோர் படலம். அது கேட்டவர்களுக்கு எல்லாவாகமப் பொருள்களும் மாறுபாடின்றி இனிது விளங்கும்' எனக் கூறி, அச்சிவஞான போதத்தை நந்திபெருமானுக்கு அருளிச்செய்தனர். நந்திபெருமானும் அது கேட்ட அளவிலே எல்லா வையமும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து, பின் அதனைத் தம் மாணாக்கர் பல்லோரினுஞ் சிறந்த சனற்குமார முனிகட்கு அருளிச் செய்தனர். அவர் அதனைத் தம் மாணாக்கர் பல்லோரினுஞ் சிறந்த சத்தியஞானதரிசனிகளுக்கு அருளிச்செய்தனர். அவர் அதனைத் தம் மாணாக்கர் பல்லோரினும் சிறந்த பரஞ்சோதிமாமுனிகட்கு அருளிச்செய்தனர்.

அவர் தமிழ்நாடு செய்த தவத்தானே திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்தருளி மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையராய் எழுந்தருளியிருந்த மெய்கண்ட தேவர்பால் வந்து சிவஞான போ

தத்தை நல்கி 'இதனை ஈண்டுள்ளோர் உணர்ந்து உய்தற்பொருட்டு மொழிபெயர்த்துச் செய்து பொழிப்பும் உரைக்க' என்றருளிப் பொழிப்புரைக்குமாறும் சத்தியஞான தரிசனிகள்பால் தாம் கேட்டவாறே வகுத்தருளிச்செய்து நீங்கினர். மெய்கண்ட தேவரும் அவ்வாறே மொழிபெயர்த்துப் பொழிப்புரையும் செய்தருளித் தம் மாணாக்கர் பல்லோரினும் சிறந்த திருத்துறையூர் அருணந்திகுரவர்க்கு அளித்தருளினர்.

அருணந்தி குரவர் மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவஞான போதத்திற்கு வழிநூலாகச் சிவஞானசித்தியாரும், இருபா இருபது என்னும் மற்றொரு நூலும் அருளிச்செய்து, அந்நூல்கள்மூன்றனையும் தம் மாணாக்கர் பல்லோரினும் சிறந்த கடந்தை மறைஞானசம்பந்தகுரவருக்கு உபதேசித்தருளினர். அவர் அவற்றைத் தமது மாணாக்கர் பல்லோரினும் சிறந்தவரும் தில்லைவாழந்தணர்களில் ஒருவருமாகிய உமாபதிதேவருக்கு உபதேசித்தருளினர்.

உமாபதி தேவர் சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன்குடியில் எழுந்தருளியிருந்துகொண்டு, வடமொழியிலே பௌஷ்கராகமத்திற்கு வியாக்கியானமும், தமிழிலே சிவப்பிரகாசம் முதலிய எட்டுச் சித்தாந்த சாஸ்திரங்களும், கோயிற்புராணம், சேக்கிழார் நாயனர் புராணம் முதலியனவும் அருளிச்செய்து அவற்றைத் தம் மாணாக்கர் பல்லோரினும் சிறந்த அருணமச்சிவாய தேசிகருக்கு உபதேசித்தருளினர். அவர் அவற்றை நவகோடி சித்தவாசபுரம் என்னும் திருவாவடுதுறையிலும் வேதாரணியத்திலும் சித்தமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த சித்தர் சிவப்பிரகாச தேசிகருக்கு உபதேசித்தருளினர்.

சோழமண்டலத்திலே திருமூவலூரிலே சைவவேளாளர் குலத்திலே முழுதுலகும் தொழுதேத்தும் முன்னைத் தவமுடையார் ஒருவர், தமக்குப் புத்திரப்பேறின்மையால் வருந்தித் தம் மனைவியாரோடு புள்ளிருக்குவேளூரை அடைந்து வைத்தியநாதப் பெருமானையும் தையல்நாயகியம்மையையும் அன்போடு வழிபட்டு வருவாராயினர். வைத்தியநாதப்பெருமான் திருவருளால் அவர்கட்கு ஒரு சற்புத்திரர் திருவவதாரம் செய்தருளினர். பெற்றோர் தமக்குப் புத்திரர் வைத்தியநாதப்பெருமான் திருவருளால் அவதரித்தமையால், அப்புதல்வருக்கு வைத்தியநாதரெனப் பிள்ளைத்

திருநாமம் சாத்தி வளர்த்து வருவாராயினர். வைத்தியநாதர் ஏழாண்டு அடைந்த காலத்தில் பெற்ரோர் அவரையும் உடன் அழைத்துக்கொண்டு புள்ளிருக்குவேளூரை அடைந்து சிவதரிசனம் செய்தபொழுது, வைத்தியநாதப்பெருமான் தம்மைப் பூசிக்கும் ஆதிசைவத் திருமேனிகொண்டு வைத்தியநாதர்முன் தோன்றி, ஓர் சிவலிங்கப்பெருமானைக் கொடுத்தருளி அப்பெருமானைப் பூசிக்கும் முறையையும் உபதேசித்து மறைந்தருளினர். இந்நிகழ்ச்சிகண்ட பெற்ரோர் மிகுந்த ஆச்சரியம் அடைந்து, தமது புத்திரரது தவப்பேற்றை நினைந்து மகிழ்வாராயினர். வைத்தியநாதர் பின்னர்த் தம் பெற்ரோருடன் மூவலூரை அடைந்து அச்சிவலிங்கப்பெருமானைத் தமது ஆன்மார்த்த பூசாமூர்த்தியாகக் கொண்டு விதிப்படி நாடோறும் பூசித்து வருவாராயினர்.

ஒரு நாள் சித்தர் சிவப்பிரகாச தேசிகர் கொற்றவன்குடியிலிருந்து வேதாரணியத்திற்குத் திருக்கூட்டத்தோடு எழுந்தருளி மூவலூர் வந்து சேர்ந்தனர். அப்பொழுது வைத்தியநாதர் முன்னை வினை கூட்டச் சிவப்பிரகாச தேசிகர்பாற் சென்று தம்மையாட்கொண்டருளுமாறு பிரார்த்தித்தனர். சித்த மூர்த்திகளும் வைத்தியநாதரது பக்குவநிலையைத் தெரிந்து அவரைநோக்கி 'அன்பனே! நீ நம்முடன் வருவாயாக' என்று பணித்தருளினர். வைத்தியநாதர் உடனே தமது ஆன்மார்த்த பூசாமூர்த்தியை எழுந்தருளச் செய்துகொண்டு, சித்த மூர்த்திகளுக்குப்பின் அடியார் குழாத்தோடு செல்வாராயினர். இதனை யறிந்த பெற்ரோர் வைத்தியநாதப்பெருமான் முன்பு சிவலிங்கப்பெருமானை அளித்தருளியதற்கேற்ப, இன்று ஆசாரிய மூர்த்திகளின் அநுக்கிரகமும் கிடைத்ததென்று மகிழ்ந்து, தமது புதல்வரை ஆசாரியருடன் செல்ல அநுமதித்தனர்.

சித்த மூர்த்திகள் அடியார் குழாத்தோடு வேதாரணியம் சென்று சிவதரிசனம் செய்துவிட்டு, அந்நகரின் பக்கத்திலுள்ள வனத்தில் தாம் முன்பு வீற்றிருந்த ஒரு தவச்சூழலில் வீற்றிருந்தருளித் தமது அடியார்களுக்குச் சித்தாந்த ஞானோபதேசம் செய்துகொண்டிருந்தனர். சிலநாட் சென்ற பின்னர்ச் சித்த மூர்த்திகள் வேதாரணியத்தினின்றும் புறப்பட்டு அடியார் குழாத்தோடு திருவாவடுதுறையை அடைந்து திருக்கோயிலிற் சென்று ஸ்ரீ மாசிலா

மணிப்பெருமானையும் ஒப்பிலாமுலையம்மையையும் வணங்கிப் புறம் போந்து, ஆலயத்தின் தென்பக்கம் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் திருமாளிகைத் தேவரை வணங்கி அங்கே தாம் அமைத்த திருமடத்தில் வீற்றிருந்தருளினர். இங்ஙனம் வீற்றி ருந்தருளும் சித்த மூர்த்திகள் தம்பாலுற்ற சத்திநிபாதத்து உத்தம ராகிய வைத்தியநாதருக்கு ஓர் சுபதினத்திலே ஞானதிக்ஷை புரிந்து, தமது ஆசாரியர் திருநாமமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத் திருப்பெய ரையே அவருக்குத் தீக்ஷாநாமமாகச் சூட்டியருளிச் சிவஞான போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்களை உபதேசித்தருளினர். நற்றவச் சீடராகிய நமச்சிவாயரும் அவற்றின் பொருளையெல்லாம் அடியார் குழாத்துடனிருந்து சிந்தித்துத் தெளிந்து உண்மை நிட்டைகூடிச் சிவாநுபூதிச் செல்வராய் விளங்கினர்.

சித்தர் சிவப்பிரகாச தேசிகர் தமது மெய்கண்ட சந்தான சிவஞான போத உபதேச பரம்பரை என்றும் தழைத்தோங்குதற் குத் தகுதியான ஸ்தலத்தை ஆராய்ந்த காலத்தில், தன்னையடைந் தவர்களுக்கு மோக்ஷத்தை ஒருதலையாகக் கொடுப்பதால் அநாதி முத்தி க்ஷேத்திரமென்றும், உமாதேவியாருக்கு நேர்ந்த பசு வடிவை நீக்கியதால் ஞானக் கோமுத்தி என்றும், நவகோடி சித்தர் வசிப் பதால் நவகோடி சித்தவாசபுரமென்றும் பெயர் வழங்கப்படுவதாயும், சைவசித்தாந்த மரபின் முதற்குரவராகிய திருநந்தி தேவரிடத்தில் ஞானோபதேசம் பெற்ற சிவயோகிகளில் ஒருவராகிய திருமூலநாய னார் மூவாயிரம் ஆண்டுகள் மெய்ஞ்ஞான நிட்டையிலிருந்து சிவாகம அர்த்தங்களையெல்லாம் தமிழில் திருமந்திரமென்னும் நூலாகத் திரு வாய்மலர்ந்தருளிய ஞானபீடமாயும், திருஞானசம்பந்தமூர்த்திசுவா மிகள் தமது பிதா யாகஞ் செய்யும்பொருட்டுச் சிவபெருமானைப் பிரார்த்தித்து அம்பொன் ஆயிரம் பெற்ற க்ஷேத்திரமாயும், திருமா ளிகைத்தேவர் பல அற்புதங்கள் செய்து சைவஸ்தாபனம் செய்த ஸ்தலமாயுமுள்ள திருவாவடுதுறையே தக்க ஸ்தலமாகத் தெளிந்து, அத்திருவாவடுதுறையிலே தமது நன்மாணாக்கர் பல்லோருள்ளும் சிறந்த நமச்சிவாயருக்கு ஞானபிடேகம் செய்து தமக்குப்பின் ஆசிரி யராக வைத்தருளினர்.

பின்பு ஒருநாள் வைகறைப்போதில் சித்தமூர்த்திகள் திரு வாவடுதுறையில் தாம் எழுந்தருளியிருந்த ஸ்தானத்தைச் சூழ வரை கீறித் திருவறை அமைத்து, அங்கு நின்ற சீடர்களை நோக்கியருளி

'நாம் இப்பொழுது திருமறைக்காட்டிற்குச் செல்கின்றோம். இன்றுமுதலாக அழகிய திருச்சிற்றம்பலவர் பூசையையும் அம்பலவாணர் பூசையையும் ஏற்றுக்கொண்டு நாம் கீறிய இந்த அறையினுள் அமர்ந்து நமது சைவ சித்தாந்த மரபு தழைக்க ஞானோபதேசம் செய்துவருமாறு ஆணை தந்தோம் என்று காவேரிக்கு நீராடச் சென்றிருக்கும் நமச்சிவாயனுக்கு உரைப்பீராக' என்று திருவாய் மலர்ந்தருளித், திருமாளிகைத் தேவரையும் தாம் பூசித்துவரும் சிவப்பிரகாச விநாயகரையும் வணங்கித் திருக்கோயிலை அடைந்து ஸ்ரீ மாசிலாமணிப் பெருமானையும் ஒப்பிலாமுலையம்மையையும் தரிசித்து விடைபெற்றுக்கொண்டு, தம்மைப் பின்தொடர்ந்துவந்த சீடர்களுக்குத் திருக்கரம் அமைத்து நிறுத்திவிட்டு, வேதாரணியத்திற்கு எழுந்தருளி அங்கேயுள்ள தவச்சூழலில் எழுந்தருளியிருந்தனர்.

நமச்சிவாய தேசிகர் காவேரியில் நீராடித் திரும்பிவராலும், அடியார்களிற் சிலர் விரைந்து வந்து நமஸ்கரித்து நின்று ஞானசாரியமூர்த்திகள் திருமறைக்காடு சென்றருளியதையும், அப்பொழுது ஆசாரிய மூர்த்திகள் அளித்த திருவருளாணையையும் விண்ணப்பம் செய்தார்கள். நமச்சிவாய தேசிகமூர்த்திகள் அது கேட்டதும் திருவுளத்திற் பதைபதைத்து தமது ஞானசாரியரைப் பின்தொடர்ந்துசெல்லப் பேரவாக்கொண்டிருப்பினும், அவரது திருவாணையைக் கடப்பதற்கு அஞ்சி மனம் நெக்குருகி, ஞானதேசிகர் நடந்தருளிய திசையை நோக்கிப் பூமியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து, ஞானதேசிகரது ஆணைப்படி அழகிய திருச்சிற்றம்பலவுடையவரையும், அம்பலவாணரையும், தமது ஆன்மார்த்த வைத்தியநாதத் தம்பிரானையும் சிவாகமப்படி பூசித்துக்கொண்டு, தமது ஆசிரியர் வகுத்தருளிய திருவறையில் அமர்ந்து சித்தாந்த ஞானோபதேசம் செய்து வருவாராயினர்.

இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் ஸ்ரீ ஸ்கந்த பரம்பரையில் வாமமுனி சந்தானத்தில் வந்தருளிய சிவாக்கிர யோகிகள் நமச்சிவாய தேசிகரது மகிமையைக் கேள்வியுற்றுத் திருவாவடுதுறைக்கு எழுந்தருளி மடாலயத்துள் வாலும் நமச்சிவாய தேசிகர் எதிர்கொண்டழைத்து ஒடுக்கத்திற் சென்று அளவளாவி யிருந்தனர். சிவாக்கிர யோகிகள் நமச்சிவாய தேசிகர்பால் திகழும் சீவகாருணியப் பொலிவையும் பக்தி ஞான வலிமையையும் கண்டு சிலநாள் அங்கே தங்கிப் பின் ஒருநாள் ஞானதேசிகர் வழிவிடப் புறப்பட்டுத் தமது மடாலயத்திற்கு எழுந்தருளினர்.

ஒருசமயம் திருக்கூட்டத்து அடியார்களில் ஒருவர் குரு பூசை மாகேசுர பூசைகளில் குறைநேராது இலை பறித்துக்கொள் ளும்பொருட்டுத் திருமடத்தைச் சூழ்ந்த ஓர் மறைவிடத்தில் சில வாழைகள் வைத்து வளர்த்துவந்தனர். அதனைத் திருவுள்ளத் துணர்ந்த ஞானதேசிகர்,

'இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.'

'தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.'

என்னும் திருக்குறட் பொருளை அறிவுறுப்பாராய், அவ்வடியவரை நோக்கி 'நீ இந்நாள் ஒருவகைப் பந்தமுற்றனை. யாத்திரைபோய் அதனை ஒழித்து மீள்க' என்று அருளினர். அந்த அடியவர் மனம் பதைத்து வருந்தி ஆணையைக் கடக்க அஞ்சி, ஞானதேசிகரது திருவடிகளை வணங்கி விடைபெற்று யாத்திரை செய்வாராயினர். பின்பு, சிலகாலம் கழித்து அந்த அடியவர் இருவகைப் பற்றும் நீத்து, மனத்தூய்மை எய்தி ஞானதேசிகர் திருவடிகளை அடைந்து, அடியார் குழாத்தோடும் இன்புற்றிருந்தனர்.

இஃதிவ்வாறாகக் கும்பகோணத்தில் சைவ வேளாளர் மரபில் அவதரித்து எல்லாக் கலைகளையும் பயின்று சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்த ஒருவர், சற்குருவைத் தேடி ஞானோபதேசம் பெற விரும்பி வருங்காலத்தில் திருவாவடுதுறையை அடைந்து ஞானதேசிகரைத் தரிசித்தனர். ஞானதேசிகர் அவரது பரிபாக நிலை தெரிந்து அவருக்குத் தீக்ஷைசெய்து சிவப்பிரகாசரென்னும் தமது ஆசிரியர் திருநாமத்தை அவருக்குத் தீக்ஷா நாமமாகச் சாத்திச் சிவஞானபோத முதலிய ஞான நூல்களை யுபதேசித்துத் தமது அணுக்கத் தொண்டராகக் கொண்டுவருவாராயினர். அந்நாளில் வேலூரில் அரசுபுரிந்துகொண்டிருந்த விருபாக்ஷிராயர் ஆணைப்படி நடுநாட்டை ஆண்டுவந்த ஓர் வைணவ அதிகாரி சிதம்பரத்திற்கு வந்து, நடராஜப் பெருமானுக்கு நடக்கும் விசேட வைபவங்களைக் கண்டு பொறாமைகொண்டு, சபாநாயகர் சந்நிதியிலிருந்த துவஜஸ்தம்பத்தைக் கோவிந்தப்பெருமாள் முன்பு நிறுத்திச் சபாநாயகருக்குரிய வருமானம் முழுவதையும் அப்பெருமாளுக்கு ஆக்கினர். தில்லைவாழந்தணர்கள் யாது செய்வதென்று ஒன்றுந் தோன்

ளுதவராகி மனங்கலங்கிப் பின் ஒருவாறு தெளிந்து, நமது உமாபதி தேவ நாயனுர் பரம்பரையில் வந்து திருவாவடுதுறையில் சைவ சித்தாந்த ஞானபாநுவாகி எழுந்தருளியிருக்கும் நமச்சிவாய தேசி கோத்தமரிடம் தெரிவிப்போமென்று நிச்சயித்துத் துறைசையை அடைந்து ஞானதேசிகரிடம் தெரிவித்தனர். ஞானதேசிகர் அது கேட்டதும் மனம் பதைத்துத் தமக்குப்பின் ஆசிரியராக நியமிக்கப் பட்ட சிவப்பிரகாசரை அரசன்பாற் சென்று வேண்டுவன செய்யு மாறு பணித்தருளினர்.

சிவப்பிரகாச தேசிகர் தில்லைவாழந்தணர்கள் கொடுத்த விருதுகளோடு சென்று அந்த வைணவ அதிகாரியைக் கண்டு பேசி யும் பயன்பெருமையால் வேலூர் சென்றனர். அரசர் மாத்துவ ராதலால், சைவராகிய முதன்மந்திரியாரைக்கொண்டு தம் கரு த்தை முடிக்கத் தேசிகர் தீர்மானித்தனர். முதன்மந்திரியாராகிய இலிங்கணபத்தரோ சிவலிங்க தாரணமில்லாதவரைக் கண்ணெடுத் தும் பாராத வீரசைவரென்பதைத் தெரிந்த சிவப்பிரகாச தேசிகர் சிறிதுநேரம் சிந்தித்திருந்து இவ்விடத்துச் செய்யத்தக்கது இது வேபோலுமெனக்கொண்டு, தமது ஆன்மார்த்த சிவலிங்கப்பெரு மானை அகம்போலப் புறமும் தரித்து மந்திரியாரைக் காணச் சென்ற னர். இலிங்கணபத்தர் சுவாமிகளை எதிர்கொண்டழைத்து உபசரி த்து, வந்த செய்தியை வினவச் சுவாமிகள் விஷயங்களனைத்தை யும் தெரிவித்தனர். உடனே மந்திரியார் அரசரிடம் செய்தியைத் தெரிவித்து அந்த வைணவ அதிகாரியை அந்த ஸ்தானத்தினின் றும் நீக்கி, வேறோர் அதிகாரியை நியமித்துச் சபாநாயகருக்கு முன்போல யாவும் சிறப்பாக நடக்குமாறு ஆணை செய்வித்தனர். சிவப்பிரகாசதேசிகர் சிலநாள் மந்திரியாருடன் தங்கியிருந்து வீர சைவத்தின் உண்மைகளை அவருக்குப் போதித்தனர். அப்பொ ழுது மந்திரியார் திருவண்ணமலையில் தாம் அமைத்துத் தரும் திரு மடத்தில் எழுந்தருளியிருக்குமாறு சுவாமிகளை வேண்டினர். சுவா மிகள் தமது குருமூர்த்திகளிடம் நிகழ்ந்த செய்திகளை விண்ணப் பம் செய்யவேண்டுமென்று கூறி மந்திரியாரிடம் விடைபெற்றுச் சிதம்பரம் வந்து நடராஜப்பெருமானைத் தரிசித்துத் திருவாவடு துறையை அடைந்து ஞானதேசிகரைத் தரிசித்து நிகழ்ந்த செய்தி முழுவதும் விண்ணப்பஞ் செய்தனர். ஞானதேசிகர் யாவும் திரு வுள்ளத்தில் ஓர்ந்து சிவப்பிரகாச தேசிகர் வினைவயத்தால் சித்தாந்த சைவநெறி கடந்து புறநெறியில் வீழ்ந்த புதுமையை நினைந்து.

திருவருட் சம்மதம் அதுபோலு மென்று கொண்டு, அவரை 'நீ இலிங்கணபத்தர் வேண்டுகோட்படி அவருக்கு ஞானசாரியராக அமருவாயாக' என்று கட்டளையிட்டருளினர். சிவப்பிரகாச தேசிகரும் அவ்வாறே சென்று திருவண்ணாமலையில் மந்திரியாரால் அமைக்கப்பட்ட திருமடத்திலிருந்து வீரசைவத்தைப் போதிப்பாராயினர். இவ்வாதீன பரம்பரையே திருத்துறையூர் வீரசைவ ஆதீனமென்ப.

பின்பு, நமச்சிவாயதேசிக மூர்த்திகள் திருவாவடுதுறையில் சைவவேளாளர் குலத்தில் அவதரித்துச் சத்திநிபாதத்து உத்தமராய் விளங்கிய மறைஞான தேசிக சுவாமிகளுக்கு ஞானபிடேகம் செய்தருளினர். அவர் அபிடேகம் பெற்றுச் சிலபகல் கழிதலும் ஓர் தனியிடம் சார்ந்து தைலதாரைபோல இடையறாது நிட்டையில் வீற்றிருந்தருளினர்.

அப்பால் ஞானதேசிகர் தமது குருசந்தானம் தழைத்தோங்கும்பொருட்டுத் திருக்கூட்டத்தாரில அம்பலவாணர், தக்ஷிணாமூர்த்தி என்னும் இருவருக்கும் ஆசாரிய அபிடேகம் செய்தருளினர். இவர்களுள் தக்ஷிணாமூர்த்தி தேசிகர் மெய்கண்ட சாத்திரக் கருத்துக்களை உள்ளடக்கிய தசகாரியம், உபதேசப்பஃறொடை என்னும் இரு நூல்களையும் அருளிச்செய்து திருவாவடுதுறையிலே ஓர் மாசி மாதத்துச் சித்திரை நக்ஷத்திரத்தில் சிவபரிபூரண முற்றனர்.

ஞானதேசிகர் துவிதீய ஆசாரியராகிய அம்பலவாண தேசிகருடன் நெடுங்காலம் சீடர்களுக்குச் சித்தாந்த ஞானோபதேசம் செய்து வீற்றிருந்தருளித் தமது ஆன்மார்த்த வைத்தியநாதத்தம்பிரானை அழகிய திருச்சிற்றம்பலவுடையவர் அம்பலவாணரென்னும் உபயமூர்த்திகளோடும் எழுந்தருளப்பண்ணிப் பூசித்துக்கொண்டு தமது அருளுபதேச பாம்பரையைப் புரந்து வருமாறு துவிதீய ஆசாரியராகிய அம்பலவாண தேசிகருக்குக் கட்டளையிட்டருளித் தை மாதத்து அச்சுவினி நக்ஷத்திரத்தில் திருவாவடுதுறையிலே சிவசோதியில் இரண்டறக் கலந்தருளினர்.

அம்பலவாண தேசிகர் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகா

மணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டைவிளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை என்னும் செய்யுள் நூல்கள் பத்தும், சிவஞானபோத சிந்தனை யென்னும் உரை நூல் ஒன்றும், பூப்பிள்ளையட்டவணை என்னும் சிறு நூலொன்றும் அருளிச்செய்தனர்.

ஆதீனத்துப் பிரதம பரமாசாரியர் ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளும் துவிதிய ஆசிரியர் அம்பலவாண தேசிகருமாதலால், இந்தத் திருவாவடுதுறை ஞானாதீனத்துக்கு வந்தருளும் ஆசாரியர்கள் பெரியபட்டத்தில் எழுந்தருளி யிருக்கும்பொழுது அடியவர் முதலாயினோர்க்கு விடுத்தருளும் திருமுகங்களில் நமச்சிவாயம் என்றும், சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருக்கும்பொழுது அம்பலவாணர் துணை என்றும் கைச்சாத்திடுதல் சாம்பிரதாயம்.

நுணங்குஞ் சமய நூற்றலைமை நுவலுந் தகைத்தாய் நந்திமுனி
கணங்கட் களித்த சிவஞான போதக் கதிநூ னெறிகாட்டிப் [தாள்
பணங்கொ ளரவர் துறைசையில்வாழ் பஞ்சாக் கரதே சிகன்மலர்த்
வணங்க வழுத்த மனத்திருத்த வாய்த்த பிறப்பை வாழ்த்துவாம்.

சிவமயம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து ஞானதேசிகர்கள்.

1. ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய தேசிகர்.
2. ,, மறைஞான தேசிகர்.
3. ,, அம்பலவாண தேசிகர்.
4. ,, உருத்திரகோடி தேசிகர்.
5. ,, வேலப்ப தேசிகர்.
6. ,, குமாரசுவாமி தேசிகர்.
7. ,, பிற்குமாரசுவாமி தேசிகர்.
8. ,, மாசிலாமணி தேசிகர்.
9. ,, இராமலிங்க தேசிகர்.
10. ,, வேலப்ப தேசிகர்
11. ,, பின்வேலப்ப தேசிகர்.
12. ,, திருச்சிற்றம்பல தேசிகர்.
13. ,, அம்பலவாண தேசிகர்.
14. ,, சுப்பிரமணிய தேசிகர்.
15. ,, அம்பலவாண தேசிகர்.
16. ,, சுப்பிரமணிய தேசிகர்.
17. ,, அம்பலவாண தேசிகர்.
18. ,, சுப்பிரமணிய தேசிகர்.
19. ,, வைத்தியலிங்க தேசிகர்.
20. ,, அம்பலவாண தேசிகரவர்கள்.



திருவாவடுதுறை ஆதீனத்தில்
20-வது பட்டத்தை வகித்திருக்கும்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டாரசன்னிதிகள்.

உ
சிவமயம்.

முத்தி பஞ்சாக்கர மாலை.

கட்டளைக் கலித்துறை.

திருவேயென் செல்வச் சிறப்பே சிவானந்தத் தெள்ளமுத
வுருவே யுருவமு மூருடன் பேருமொன் றும்புணரா
வருவே தெளிந்த வறிவேமெய் யன்பர்க் கருளுந்தெய்வத்
தருவேதென் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே.

இதன் பொருள் :—என் திருவே-எனது ஐசுவரியமாயிருப்பவரே, என் செல்வச் சிறப்பே-எனது ஐசுவரியத்தின் பயனாகிய சிறப்பாயிருப்பவரே, சிவானந்தத் தெள்ளமுத உருவே-சிவானந்தமாகிய தெளிந்த அமிர்தவடிவாயிருப்பவரே, உருவமும்-தமக்கென ஓர் வடிவமும், ஊருடன் பேரும்-தமக்கென ஓரூரும் பெயரும், ஒன்றும் புணரா அருவே-சிறிதும் இல்லாத நுண்ணியரே, தெளிந்த அறிவே-ஐயமும் மருட்கையும் நீங்கிய சுத்தஞானமூர்த்தியே, மெய் அன்பர்க்கு அருளும்-உண்மையான திருத்தொண்டர்களுக்கு வேண்டுவனவற்றை அநுக்கிரகஞ் செய்யும், தெய்வத் தருவே-தெய்வத்தன்மை பொருந்திய கற்பக விருக்ஷமாயிருப்பவரே, தென்-அழகிய, கோமுத்தி-திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும், முத்தி பஞ்சாக்கர சற்குருவே-உயிர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளும் நமச்சிவாய பரமாசாரியமூர்த்தியே என்பதாம்.

அருவப் பொருள்போற் புலப்படாத இயல்புபற்றி அருவே என்றார். (க)

சுந்தர மாலயன் வாழ்வுமைந் தாரிற் சுவர்க்கவைப்பு
மிந்திர ஞாலங் கனவெனக் கண்டு னிணையடிக்கே
யந்தமில் காதலுற் றூராத வின்பத் தமர்ந்திருக்கத்
தந்தருள் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே.

இதன் பொருள் :—சுந்தர மால் அயன் வாழ்வும்—அழகிய விஷ்ணுவின் பதவியும் பிரமதேவரின் பதவியும், ஐந்தாரிற் சுவர்க்க வைப்பும்—ஐந்து கற்பக விருக்ஷங்களையுடைய தேவலோக பதவியும், இந்திர ஞாலம் கனா எனக் கண்டு—இந்திர சாலமும் கனவும்போல நிலையில்லாதன என்று தெளிந்து, உன் இணை அடிக்கே—தேவரீரது இரண்டு திருவடிகளிலே, அந்தம் இல் காதல் உற்று—முடிவு இல்லாத ஆசை பொருந்தி, ஆராத இன்பத்து அமர்ந்திருக்க—நிரதிசய ஆனந்தத்தை அநுபவித்திருக்க, தந்தருள்—கிருபை செய்தருள்வாயாக, கோமுத்தி—திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும், முத்தி பஞ்சாக்கர சற்குருவே—உயிர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளும் நமச்சிவாய பரமாசாரியமூர்த்தியே என்பதாம்.

தாரு என்பது குற்றியலுகரம்போல் முடிந்தது. 'இந்திர சாலம் தோன்றும்பொழுதே இல்லையாய் வேறுவனவற்றிற்கும், கனாக்காட்சி கடைபோதலின்றி இடையே அழிவனவற்றிற்கும் உவமையாயின' என்பது சிவஞான சித்தியார் சூ. ௩., சிவஞான சுவாமிகள் உரை. (௨)

பண்டறி யாமை பிடித்துவிட் டேனை விடாதுபற்றிக்
கொண்டு குணவழி விட்டுத் திருத்தியென் கோதகற்றிப்
புண்டரி கப்பதந் தந்தாய்க்கென் னாலொரு போகமுண்டோ
தண்டமிழ்க் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே.

இதன் பொருள் :—பண்டு—அநாதியே, அறியாமை பிடித்து—ஆணவமலத்தில் அகப்பட்டு, விட்டேனை—தேவரீரை மறந்துவிட்ட அடியேனை, விடாதுபற்றிக் கொண்டு—தேவரீர்விடாமற் பிடித்துக்கொண்டு, குணவழி விட்டு—அடியேனது குணஞ்சென்ற வழியெல்லாம் செல்லும்படி என்னைவிட்டு, திருத்தி—என்னைச் செம்மைப்படுத்தி, என் கோது அகற்றி—எனது குற்றங்களை நீக்கி, புண்டரிகப்பதம் தந்தாய்க்கு—தாமரை மலர்போன்ற திருவடிகளைத் தந்த தேவரீருக்கு, என்னால் ஒரு போகமுண்டோ—அடியேனால் கிடைக்கும் அநுபவம் உண்டோ (இல்லை), தண்தமிழ்க் கோமுத்தி—குளிர்ந்த தமிழ்வளரும் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும், முத்தி பஞ்சாக்கர சற்குருவே—உயிர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளும் நமச்சிவாய பரமாசாரியமூர்த்தியே என்பதாம்.

அறியாமை பிடித்து எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். இச்செய்யுட் பொருள் 'கோலங்கொண்டவா றுணராதே' என்னும் இருபாவிருபது பற்றித் தெளியப்படும். 'என்னொலொரு போகமுண்டோ' என்றது 'யாதுநீ பெற்றதொன் றென்பால்' என்னும் திருவாசகச் சுருதிபற்றி எழுந்தது. (ரு)

மாயா படலங் கிழித்தருண் ஞானம் விளங்கவைத்து
னேயானந் தத்தி லமிழ்த்திடு வாய்நித்த முத்தசுத்தத்
தாயா சராசர பேதங்கள் யாவையுந் தோற்றுவிக்குந்
தாயான கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே.

இதன்பொருள்:—மாயா படலம் கிழித்து—(எனது ஞானக் கண்ணை மறைத்திருந்த) மாயை என்னும் படலத்தை உரித்து, அருள் ஞானம் விளங்கவைத்து—தேவரீரது திருவடி ஞானத்தை விளங்கும்படி செய்து, உன் நேய ஆனந்தத்தில் அமிழ்த்திடுவாய்—தேவரீரது சிவானந்த சாகரத்தில் அடியேனை அழுத்திவிடுவீராக, நித்த முத்த சுத்தத் தாயா—என்றும் உள்ளவராயும் அநாதிமல ரகிதராயும் மிக்கப் பரிசுத்தராயும் விளங்குகின்றவரே, சராசர பேதங்கள் யாவையும் தோற்றுவிக்கும்—இயங்கியற்பொருள் நிலையியற் பொருள் வகைகள் எல்லாவற்றையும் படைத்தருளும், தாயான—மாதாவாகிய, கோமுத்தி—திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும், முத்திபஞ்சாக்கர சற்குருவே—உயிர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளும் நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம். (சு)

அரணங்கண் மூன்று மெரித்தாய் சரண மதினுமன்பர்
மரணம் படாதருள் வைத்தாய் சரணம் வலியவந்தக்
காரணங்க ளான்மெலிந் தெய்த்தேன் சரணநின் பொற்கழலே
சரணந்தென் கோமுத்தி முத்திபஞ் சாக்கர சற்குருவே.

இதன்பொருள்:—அரணங்கள் மூன்றும் எரித்தாய்—அசுரரது மும்மதில்களையும் எரித்து அழித்தவரே, சரணம்—அடியேன் தேவரீரது அடைக்கலம், அதினும்—அவ்வாறு அழிப்பதினும், அன்பர்—அங்கிருந்த சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்னும் மூன்று சிவனடியார்களும், மரணம் படாது—இறந்தொழியாது, அருள் வைத்தாய்—அருள் புரிந்தவரே, சரணம்—அடியேன் தேவரீரது அடைக்கலம், வலிய—வன்மை பொருந்திய, அந்தக் காரணங்களால் மெலிந்து எய்த்

தேன்—சித்தம் மனம் அகங்காரம் புத்தி என்னும் இவற்றால் மிகவும் இளைத்துவிட்டேன், சரணம்—அடியேன் தேவரீரது அடைக்கலம், நின் பொற்கழலே சரணம்—அடியேனுக்குத் தேவரீரது பொன் போன்ற திருவடிகளே அடைக்கலம், தென்—அழகிய, கோமுத்தி—திருவாவடுதுறையிலெழுந்தருளியிருக்கும், முத்திபஞ்சாக்கர சற்குருவே-உயிர்களுக்கு முத்தியைக் கொடுத்தருளும் நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

‘ அதினும் அன்பர், மரணம் படாதருள் வைத்த ’ வரலாறு காஞ்சிப்புராணத்து முப்புராரி கோட்டப் படலத்தால் நன்கு அறியப்படும்.

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.
சிவஞான யோகிகள் திருவடி வாழ்க.

சிவமயம்.

ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர் மாலை.

கட்டளைக் கலித்துறை.

அறிவே யருட்செல்வ மேநிறை வேயரசே யடியா
ருறவேயென் னருயி ரேமணி யேயுரு காதநெஞ்சிற்
பிறிவே துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச்
செறிவே கருணைப் பிழம்பேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள்:— அறிவே—ஞானசொரூபமா யிருப்பவரே, அருட்செல்வமே—திருவருளாகிய ஐசுவரிய வடிவாயிருப்பவரே, நிறைவே—சர்வபரிபூரணராயிருப்பவரே, அரசே—தலைவரே, அடியார் உறவே—திருத்தொண்டர்களுக்குச் சுற்றமாயிருப்பவரே, என் ஆருயிரே—என்னுடைய அருமையான உயிராயிருப்பவரே, மணியே—இரத்தினம்போன்ற பிரகாசரூபரே, உருகாத நெஞ்சிற் பிறிவே—கசியாத மனத்தினின்றும் நீங்கியிருப்பவரே, துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச் செறிவே—துரியாதீதநிலையில் அனுபவிக்கப்படும் சிவானந்தமாகிய பெருமை பொருந்திய அமுதத்தின்நிறைவே, கருணைப் பிழம்பே—இரக்கமே வடிவுகொண்டவரே, பஞ்சாக்கர தேசிகனே—(திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட தேசிகன் சந்தானத்தில் விளங்கிய) துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

துரியங் கடந்த நிலையாவது நிருமல துரியாதீதம். அந்நிலை 'கருவிகளோடும் தொழிற்பட்டு நிற்பதாகிய சகல சாக்கிரத்திற்றானே கருவி ஒன்றனோடுங் கூடாது தொழிலிறந்து நிற்கும் நிலை.' (சிவஞான சித்தியார். அ. ௩.௰௪. சிவஞான சுவாமிகளுரை.) அந்நிலை யடைந்தோரது பெருமை

"சாக்கிரத்தே யதீதத்தைப் புரிந்தவர்க ளுலகிற்
சருவசங்க நிவிர்த்திவந்த தபோதனர்க ளிவர்கள்
பாக்கியத்தைப் பகர்வதுவெ னிம்மையிலே யுயிரின்
பற்றறுத்துப் பாத்தையடை பராவுசிவ ரன்றே

வாக்குமுடி கவித்தரசாண் டவர்களரி வையரோ
டறுபவித்தங் கிருந்திடினு மகப்பற்றற் றிருப்பர்."

எனச் சிவஞான சித்தியாரிற் கூறப்பட்டது.

" துரியநிலை கடந்து போந்து, திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்து." என இவ்வாசிரியர் காஞ்சிப் புராணத்தும் அருளிச் செய்தனர். (௧)

பொய்யுங் கவடுங் கொடுமையும் வஞ்சமும் பூண்டபொல்லாக்
கையன் கலதி முழுமூட னேனுநின் கண்ணருளா
லுய்யும் படியென்று கூடுமெந் தாயுண்மை யாளரன்பு
செய்யுந் துறைசையுட் டேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :—பொய்யும்—பொய்யும், கவடும்—தந்திரமும், கொடுமையும்—கொடுமையும், வஞ்சமும்—வஞ்சனையும், பூண்ட—பொருந்திய, பொல்லாக் கையன்—பொல்லாத கீழ்மகனுகவும், கலதி—மூதேவியாகவும், முழுமூடனேனும்—முழுமூடனுகவும் நான் இருந்தாலும், நின் கண்ணருளால்—தேவரீரது கிருபாகடாக்ஷத்தால், உய்யும்படி—அடியேன் பிழைக்கும் வண்ணம், என்று கூடும்—எந்தக் காலத்தில் கிடைக்கும், எந்தாய்—எனது பிதாவே, உண்மையாளர்—மெய்ம்மையான திருத்தொண்டர்கள், அன்பு செய்யும்—பக்தி செய்கின்ற, துறைசையுள்—திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கின்ற, தேவே—கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே—நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

கலதி என்பது இழிவு குறித்து நின்றது. "மாசு மெய்யினர் வண்டுவ ராடைகொள், காசை போர்க்குங் கலதிகள் சொற்கொளேல்" (திருஞான—பண்—கௌசிகம்—திருவாரூர் ௧௦) எனவும், " கலதிவாயமணர் " (பெரிய புராணம்—திருஞாநசம்—அ௨௦.) எனவும் வருதல் காண்க. எந்தாய்—எமது தாயே எனவுமாம். (௨)

பரிசறி யேனருட் பண்பறி யேனெனைப் பற்றும்வினைக்
கரிசறி யேனது மாற்றறி யேன்கல ரோடிணங்கித்
துரிசுக ளேசெயும் பொல்லா வுலகத் தொழும்பனுக்குன்
றெரிசனங் கிட்டுவ தென்றேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :—பரிசு அறியேன்—என்னுடைய தன்மையும் யான் அறியேன், அருட் பண்பு அறியேன்—தேவரீரது திருவருளின் தன்மையையும் அறியேன், எனைப் பற்றும்—என்னைப் பொருந்தியிருக்கின்ற, வினைக் கரிசு அறியேன்—இருவினைகளது குற்றத்தையும் தெரியேன், அது மாற்று அறியேன்—அக்குற்றத்தை நீக்கும் முறையையும் தெரியேன், கலரோடு இணங்கி—கீழ்மக்களோடு சேர்ந்து, துரிசுகளே செய்யும்—குற்றங்களையே செய்கின்ற, பொல்லா உலகத் தொழும்பனுக்கு—தீய உலகத்திற்கு அடிமையாகிய எனக்கு, உன் தெரிசனம் கிட்டுவது—தேவரீரது காட்சி கிடைப்பது, என்றோ—எந்தக் காலமோ, பஞ்சாக்கர தேசிகனே—துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

தரிசனம் என்பது மோனையின்பம் நோக்கித் தெரிசனம் என வந்தது. (ரு)

மருவே னுனதடி யார்திருக் கூட்ட மருவிவஞ்ச
மொருவேன் மகளிர் விழிக்கடை நோக்கக் குளம்பதைத்து
வெருவே னடிமையு மெந்நா ளுனதருண் மேவுவனே
திருவா வடுதுறைத் தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :—உனது அடியார்—உன்னுடைய திருத்தொண்டர்களது, திருக்கூட்டம் மருவேன்—திருக்கூட்டத்தைச் சேரேன், மருவி—அத்திருக்கூட்டத்தைச்சேர்ந்து, வஞ்சம் ஒருவேன்—என் மனத்திலுள்ள வஞ்சனையை நீக்கேன், மகளிர் விழிக்கடை நோக்குக்கு—பெண்களது கடைக்கண்ணாற் பார்க்கும் பார்வைக்கு, உளம் பதைத்து—மனம் நடுங்கி, வெருவேன்—அஞ்சேன், அடிமையும்—தேவரீருக்கு அடிமையான யானும், எந்நாள்—எந்தக் காலத்தில், உனது அருள் மேவுவனே—தேவரீரது திருவருளை அடைவேனோ, திருவாவடுதுறைத் தேவே—திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே—நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம். (சா)

ஆனந்த வாழ்வி லடியாரெல் லாரு மகங்களிப்ப
நானிந்த மாயத் தொடக்கினில் வீழ்ந்து நலிதனன்றே
வானந்த நீண்ட மதிலா வடுதுறை வாழ்முதலே
தேனுந்து பங்கயத் தாளாய்பஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— அடியார் எல்லாரும்—தேவரீரது திருத்தொண்டர்கள் எல்லாம், ஆனந்த வாழ்வில்—பேரானந்தப் பெருவாழ்விலே, அகம் களிப்ப—மனம் மகிழ்ந்திருப்ப, நான்—அடியேன் மட்டும், இந்த மாயத் தொடக்கினில்—இந்த மாயமான பிரபஞ்ச பந்தத்தில், வீழ்ந்து நலிதல் நன்றோ—விழுந்து வருந்துதல் நன்றாகுமா, வான் அந்தம் நீண்ட மதில்—மேகமண்டலத்தின் முடிவுவரை நீண்ட மதில்கள் சூழ்ந்த, ஆவடுதுறைவாழ் முதலே—திருவாவடுதுறையில் வாழ்கின்ற முதல்வரே, தேன் உந்து பங்கயத் தாளாய்—தேனைச் சொரிகின்ற தாமரைமலர்போன்ற திருவடியை யுடையவரே, பஞ்சாக்கர தேசிகனே—நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

வானந்த நீண்ட மதில் என்பது உயர்வுநவிற்சியணி. (௫)

வற்றாக் கருணைத் திருநோக்கு நின்முக மண்டலமுஞ்
சற்றே முகிழ்த்த குறுமூ ரலுந்தட மார்பழகும்
பொற்றாளுஞ் சின்முத் திரையுநெஞ் சூடு பொறித்துவைப்பாய்
செற்றார் புரஞ்செற்ற தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— வற்றாக் கருணைத் திருநோக்கும்—குறையாத இரக்கத்தைப் பொழிகின்ற அழகிய திருக்கண்களும், நின்முக மண்டலமும்—தேவரீரது திருமுகமண்டலமும், சற்றே முகிழ்த்த குறுமூரலும்—சிறிதே அரும்பிய புன்சிரிப்பும், தடமார்பு அழகும்—விசாலமான மார்பினது அழகும், பொற்றாளும்—பொன்போன்ற திருவடிகளும், சின்முத்திரையும்—தேவரீர் காட்டியருளுகின்ற சிவஞானபோத முத்திரையும், என் நெஞ்சு ஊடு—அடியேனது நெஞ்சிலே, பொறித்துவைப்பாய்—எழுதிவைத்தருளும், செற்றார் புரம் செற்ற—பகைவாது முப்புரங்களையும் அழித்த, தேவே—கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே—துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

"மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயி
ரம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைம்மலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ."

எனச் சின்முத்திரையின் பொருள் திருவானைக்காப் புராணத்துக் கூறப்பட்டது.

இது திருமேனி தியானஞ் செய்யுமுறை கூறிற்று. (௬)

தேருத நெஞ்சுந் தெளியாத சிந்தையுந் தேங்கியின்ப
மூருத கண்ணு மொழியாக் கவலையு முன்புகழே
கூருத நாவு மெனக்கே தகுமென்று கூட்டினையே
சீரு தருள்செய்யுந் தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— தேருத நெஞ்சும்—நம்பாத மனமும், தெளியாத சிந்தையும்—நிச்சயிக்காத புத்தியும், இன்பம் தேங்கி ஊருத கண்ணும்—இன்பம் நிறைந்து ஊற்றெடுக்காத கண்களும், ஒழியாக் கவலையும்—நீங்காத கவலையும், உன் புகழே கூருத நாவும்—தேவரீரது கீர்த்தியைமட்டும் சொல்லாத நாக்கும், எனக்கே தகும் என்று கூட்டினையே—மிக்க தீவினை செய்த எனக்கே தக்கன வென்று சேர்த்தருளினீரோ, சீருது அருள் செய்யும் தேவே—சினங்கொள்ளாது அநுக்கிரகம் செய்கின்ற கடவுளே, பஞ்சாக்கா தேசிகனே—துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

தெளிதற் கருவி புத்தி யாகலின், சிந்தை என்பது புத்தி யெனப் பொருள் கொள்ளப்பட்டது. புகழே என்பதில் ஏகாரம் பிரிநிலை. 'சீறியருளல்' என்ருர் ஸ்ரீ அருணந்திசிவமும். (எ)

நின்னரு ணோக்கினுக் கெவ்வள வேனு நெகிழ்ந்துருகா
தென்னுடை வன்மன மின்ஞர் விழிக்கடைக் கென்னிலந்தோ
வன்னியி னேர்மெழு காயுரு காநிற்கு மாயமென்னே
செந்நெறி யாய்நின்ற தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— என்னுடைய வன்மனம்—என்னுடைய கொடிய மனமானது, நின் அருள் நோக்கினுக்கு—தேவரீரது கிருபா கடாக்ஷத்திற்கு, எவ்வளவேனும் நெகிழ்ந்து உருகாது—சிறிதேனும் இளகியுருகுதல் செய்யாது, மின்ஞர் விழிக்கடைக்கு என்னில்—பெண்களது கடைக்கண்ணின் பார்வைக்கென்றல், அந்தோ—ஐயோ, வன்னியின் நேர் மெழுகாய்—தீயினை எதிர்ந்த மெழுகு போல, உருகாநிற்கும் மாயம் என்னே—உருகி நிற்கின்ற மாயச் செயல் யாது, செந்நெறியாய் நின்ற தேவே—உயிர்கள் இன்பம் அடைதற்குச் செம்மையான வழியாய் நின்ற கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே—துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

ஆக்கச்சொல் உவமை குறித்து நின்றது: 'ஆள்வாரிலி மாடாவேனோ' என்றாற்போல. (அ)

பிறவித் துயரினி யாற்றே னடைக்கலம் பேயுலகின்
மறுகித் திரிந்தலைந் தெய்த்தே னடைக்கல மங்கைநல்லா
ருறவைத் தவிர்த்துய்யக் கொள்வா யடைக்கல முண்மையன்பர்
செறிவுக்குள் வாழுமெய்த் தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :— பிறவித் துயர்–பிறத்தலால் வருந் துன்பத்தை, இனி ஆற்றேன்–இனிமேலும் பொறுக்ககில்லேன், அடைக்கலம்–அடியேன் தேவரீரது தஞ்சம், பேய் உலகில்–அறிவின்மை பொருந்திய இந்த உலகத்தில், மறுகித் திரிந்து அலைந்து எய்த்தேன் —சுழன்று திரிந்து அலைந்து இளைத்தேன், அடைக்கலம்–அடியேன் தேவரீரது தஞ்சம், மங்கை நல்லார் உறவைத் தவிர்த்து–மங்கைப் பருவத்துப் பெண்களது கூட்டுறவை நீக்கி, உய்யக் கொள்வாய்— அடியேன் பிழைக்கும்படி ஆளாகக் கொண்டருள்வீராக, அடைக்கலம்–அடியேன் தேவரீரது தஞ்சம், உண்மை அன்பர் செறிவுக்குள் வாழும் மெய்த்தேவே–மெய்ம்மையான அடியார்களது கூட்டத்தினுள்ளே வாழுகின்ற சத்தியரூபமான கடவுளே, பஞ்சாக்கர தேசிகனே–துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

நினைத்தலும் செய்தலோ டொக்குமாதலின் 'மங்கை நல்லாருறவு' எனப்பட்டது. (க)

இருவினை தாமிவை மும்மல மீங்கிவை யீதுசிவங்
கருவுறு மாருயி ருண்மை யிதுவென்று காட்டவல்ல
குருபர னீயன்றி வேறறி யேனிக் குவலயத்திற்
றிருவெண்ணெ மெய்கண்ட தேவேபஞ் சாக்கர தேசிகனே.

இதன் பொருள் :–இருவினை இவை–இருவினை என்பன இவை என்றும், மும்மலம் இவை–ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலக்களும் இவை என்றும், ஈது சிவம்–சிவம் இது என்றும், கரு உறும் ஆருயிர் உண்மை இது என்று–பிறவியை அடைகின்ற எண்ணிறந்த ஆன்மாக்களின் உண்மைத்தன்மை இது என்றும், காட்டவல்ல–தெரிவிக்கவல்ல, குருபரன் நீயன்றி வேறு அறியேன் இக்குவலயத்தில்–பரமாசாரியர் தேவரீரையன்றி இந்தப்

பூமியில் வேறொருவர் உளராக யான் அறிந்திலேன், திருவெண்ணை மெய்கண்ட தேவே—திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்தருளிய மெய்கண்ட தேவரே, பஞ்சாக்கர தேசிகனே—துறைசை நமச்சிவாய பரமாசாரிய மூர்த்தியே என்பதாம்.

தாம், ஈங்கு என்பன அசை. இருவினை என்பது கன்ம மலத்தின் வேறாய் எண்ணப்படுதலை 'இருவினைப் பாசமும் மலக்கலார்த்தலின்' எனவும், 'வினையிரண்டுஞ் சாருமல மூன்றும்' எனவும் வரும் பெரியபுராணத் திருவிருத்தங்களால் அறியப்படும். சிவஞானசித்தியாரில் 'கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்' என்பதனுரையில் மூல கன்மம் வேறு எனக் காட்டியருள்வதும் அறியத்தக்கது. தொல்காப்பியர் 'வினையே செய்வது' என்று தொடங்கித் 'தொழின்முதனிலையே' என முடிப்பதும் இக்கருத்துப்பற்றியெனச் சிவஞானபாடியத்திற் கூறப்பட்டது.

அபேதம்பற்றி 'மெய்கண்ட தேவே பஞ்சாக்கர தேசிகனே' என்றார்.

திருவெண்ணெய்நல்லூர் என்பது திருவெண்ணை என மருவிற்று.

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.
சிவஞான யோகிகள் திருவடி வாழ்க.

செய்யுள் முதற்குறிப்பகராதி.

முத்திபஞ்சாக்கரமாலை.

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகர்மாலை.